**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**கும்முடிப்பூண்டி**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண்: C.C. 133 /2025 | | காவல் நிலையம்: கும்மிடிப்பூண்டி | |
| பெயர் : இளவரசன் | அ.சா.6 | நாள் : 10.11.2025 | |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.6 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளவரசன் | தாலுக்கா | : | கும்மிடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | சரவணன் | தொழில் | : | எலக்டிரிசியன் |
| கிராமம் | : | மங்காவரம் | வயது | : | 36 |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் வழக்கறிஞர் ஆஜராகி எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் மங்காவரத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் எலக்டிரிசியன் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (ஒப்புதல் வாக்குமூலம்) உள்ள எந்த சாட்சி கையெழுத்தும் என்னுடையது அல்ல.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதவேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரிசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 30.04.2021ம் தேதி காலை 8.15 மணியளவில் நானும் சிவாவும் என்பவரும் கும்மிடிப்பூண்டி பேருந்து நிலையம் அருகே சென்று கொண்டிருந்தோம் எனவும்,அப்போது அங்கு கும்மிடிப்பூண்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சாய் என்ற நபரை பிடித்து வைத்திருந்தார் என்றும் அப்போது அந்த நபர் மேற்படி உதவி ஆய்வாளரிடம் தானாக முன்வந்து மேற்படி காவல் நிலைய குற்ற எண். 6/2021 சம்பந்தமாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும் சிவா என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும், இது தொடர்பாக உதவி ஆய்வாளர் எங்களை விசாரணை செய்தார் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக

மேற்கண்ட விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் இந்த வழக்கின் எதிரிகளுக்கு சாதகமாக இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

ஒம்/- இளவரசன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R

Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.10 12:16:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி